பற்றி இந்தத் துறை பரிசிலித்து வருகிறது. இதிலே புதிய ரகங்கள் இப்போது வெளியிடப்பட்டிருக்கின்றன. என்பது கனம் அங்கத்தினர் அவர்களுக்கே தெரியும்.

திரு. இ. எஸ். தியாகராசன்: தற்போது இந்தத் தொழிற்சாலை யார் நிர்வாகத்தில் இருக்கிறது? கடந்த ஆண்டு இதில் பெற்ற லாபம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: லாப நஷ்டக் கணக்கு விவரம் இல்லை. கனம் அங்கத்தினர்களுக்கே தெரிந்த செய்தி—இதை நடத்த வேண்டாம், ஏலத்தில் விட்டு விடலாம் என்ற முடிவை அன்றைய நிர்வாகம் அறிவித்தது. அதை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. அரசாங்கத்தின் பொறுப்புக்கு வந்தவுடன் ஏற்று நல்ல முறையில் நடத்தப்பட்டு வருகிறது.

ஒண்டிப்புத்தூர் அருகே இரயில்வே மேம்பாலம்

* 525 வினா—திரு. ஏ. சுப்பிரமணியம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கோவையையடுத்த ஒண்டிப்புதூரில், திருச்சி பாதையில் உள்ள இரயில்வே லெவல் கிராசிங்கில் மேம்பாலம் கட்டும் செயற்குறிப்பு ஏதுவும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இல்லை.

பாசன வசதிகள்

* 526 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) குளித்தலை வட்டம், சிந்தலவாடி வடிகால் வாய்க்காலில் இருந்து குழாய் மூலம் தண்ணீர் எடுத்துச்சென்று ஆயக்கட்டில் சேராத நிலங்களுக்கு பம்புசெட்டு மூலம் பாசனத்திற்குப் பயன்படுத்தப்படுவது உண்மையா?

(இ) ஆம் எனில், எவ்வளவு ஏக்கர் நிலங்களுக்கு எந்த ஆண்டு முதல் இவ்வாறு பாய்ச்சப்படுகிறது?

(உ) இவைகளின் பேரில் தீர்வை ஏதேனும் வசூலிக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை. சிந்தலவாடி வடிகாலின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஆயக்கட்டு நிலங்கள் கிடையாது, ஆகவே ஆயக்கட்டில் சேராத நிலங்கள் பாசனம் செய்யப்படுகின்றனவா என்ற கேள்வி எழாது.

(இ) & (உ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

* 527 வினா—திரு. அ. சின்னசாமி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) செயங்கொண்டம் தொகுதியில் உள்ள தா—பழூர் ஒன்றியப் பகுதியில் நீர்ப்பாசன வசதியளிக்க மருதையாற்றுத் திட்டம் அரசாங்கத்தால் பரிசீலிக்கப்பட்டதா?

(இ) அதற்கு ஆய்வு ( (Investigation) ) செய்ய செலவு செய்யப் பட்ட தொகை எவ்வளவு?

(உ) இப்போது அத்திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) திருச்சி மாவட்டத்தில் உள்ள எல்லா சிறப்பு சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கான ஆய்வுச் செலவுகள் ஒரே பொது மதிப்பீட்டின் கீழ் கொண்டு வந்ததால் மருதையாறு நீர்ப்பாசன ஆய்வுத் திட்டச் செலவு எவ்வளவு என்று தனியே மதிப்பிடப்படவில்லை.

(உ) மருதையாற்று நீரில் சோடியம்குளோரைடு போன்ற உப்புக்கள் அதிகமாக கலந்திருப்பதினுலும், பாசனத்திற்குத் தகுதியற்றதாக முடிவு செய்யப்பட்டதினுலும் கைவிடப்பட்டது.

பெரியபாளையத்தில் மேம்பாலம்

* 528 வினு—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா:

திருவள்ளூர் வட்டம், பெரியபாளையம் தரைப்பாலத்தில் வெள்ளம் வரும் போது போக்குவரத்து பாதிக்கப்படுவதால், மேம்பாலம் கட்ட திட்டம் ஏதே னும் அரசு பரிசிலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இல்லை.

திரு. கா. வேழவேந்தன்: பெருவழித் துறையைச் சேர்ந்த இந்த தரைப் பாலம் ஆரணியாற்றின் மேல் அமைந்திருக்கிறது. இதில் அதிகப் போக்கு வரத்து இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் அரசு போக்குவரத்து பஸ்களும், வண்டிகளும் வெள்ளம்வரும்போது கவிழ்ந்து மூழ்கி விடுகின்றன. அப்போது போர் நெருக்கடி காரணமாக தரைப்பாலமாக இருப்பதை மேம்பாலமாகக் கட்ட முடியாது என்று கூறினர்கள். இப்போது நெருக்கடி நீருகிற சூழ் நிலையில் இப்போதாவது இது திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மீண்டும் நெருக்கடி ஏற்பட்ட ருப்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். 1971-72-ல் பார்ட் 2 ஸ்கீமில் சேர்க்கப்பட்டு நிதிநிலை நெருக்கடி காரணமாக எடுத்துக்கொள்ளப் படவில்லை. அது இப்போது பார்ட் 2 ப்ரொபோசலில் சேர்த்துக் கொள்ளப் படும்.

அன்னப்பநாய்க்கன் குப்பம் அணைக்கட்டு நீர்

* 529 வினு—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா:

பொன்னேரி வட்டம், அன்னப்ப நாய்க்கன் குப்பம் அணைக்கட்டு நீரை கும்முடிப்பூண்டி கீசா ஏரிக்கு வருமாறு செய்யத் திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா?